## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

**முன்னிலை : திரு.ப.பிரவீன் ஜீவா, பி.ஏ., பி.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
(முழு கூடுதல் பொறுப்பு)
அம்பாசமுத்திரம்.

2026 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 11–ம் நாள், புதன்கிழமை

**<u>ஐ.ஏ.எண். 3/2025–இன்</u>**

**<u>அ.வ.எண். 100/2025</u>**

(CNR.No.TNTL0D-000134-2025)

திரு. மு. முத்ரா ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. திரு. சுப்பிரமணியன்

2. தமிழக அரசு அதன் திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவர் மூலம், திருநெல்வேலி.

3. தாசில்தார், தாலுகா அலுவலகம் அம்பாசமுத்திரம் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு கடந்த 27.02.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.A.R.இராமசுப்பிரமணியன் மற்றும் திரு.A.R.இராஜாங்கம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சைலபதி அவர்கள் ஆஜராகியும், 2, 3ம் எதிர்மனுதாரர்கள்/2, 3ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R.மீனாட்சிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தபசில் சொத்தை அமைதியாக அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது வேலையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என வழக்கு முடியும் வரை இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், கட்டளை 39, விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

தபசில் சொத்தும் வேறும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டது. தபசில் சொத்து புஞ்சை நிலமானது கோடாரங்குளம் கிராமம், ஏகாம்பரபுரத்தில் அடங்கியுள்ளது. தபசில் உள்ளிட்ட நிலங்களுக்கு சர்காரால் பட்டா கொடுக்கப்பட்டு, தீர்வை வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. மனுதாரர்/வாதி தபசில் சொத்தை ஆதீனத்திடம் கடந்த 29.01.2025 அன்று டிரிப்ளிகேட்டில் அடையோலை போட்டு பயிரிடும் ஸ்தானத்தில் பயிர் செய்து, தபசில் சொத்தை சுற்றிலும் முள் வேலி அமைத்து நெல்லி கன்றுகள் வைத்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். மனுதாரர்/வாதிக்கும், ஆதீனத்திற்கும் இடையே பிறப்பித்துக்கொண்ட அடையோலை ஷரத்துப்படி பசலி 1க்கு வாதி, ஆதீனத்திற்கு பசலி குத்தகையாக ரூ.2,000/- செலுத்தி தகுந்த ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்படி, மனுதாரர்/வாதி நடப்பு பசலியான 1425 பசலிக்குரிய குத்தகை தொகையான ரூ.2,000/-ஐ ஆதினம் சைவ மடம் என்பதால், சைவ சமய நூல்கள் வெளியீட்டிற்காக நன்கொடையாக ரூ.1,500/-ஐ ஆதீன வசம் செலுத்தி வாதி ரசீது பெற்றுள்ளார். தபசில் சொத்திற்கு தெற்கே ஓடை மற்றும் பாறை புறம்போக்கு உள்ளது. மனுதாரர்/வாதி தபசில் சொத்தை அடையோலை போடுவதற்கு முன்பு அளந்து அத்து கட்டி தான் திருவாவடுதுறை ஆதீனத்திடம் சொத்தை குத்தகைக்கு ஏற்றார். மேலும், தபசில் சொத்திற்கு தென்புறம் யாதொரு வழி பாதையும் கிடையாது என்பது வருவாய் ஆவணங்கள் மூலம் தெரியவரும்.

(ii) இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு தென்புறம் பாதை இருப்பதாகவும், அதை வாதி ஆக்கிரமித்திருப்பதாகவும் சங்கதி கண்டு 2ம்

எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியிடத்தில் மனு கொடுத்தார். மேற்படி மனுவிற்கு வாதியால் தகுந்த ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேலும், தபசில் சொத்திற்கு தென்புறமுள்ள புறம்போக்கில் பிரஸ்தாப ஆக்கிரமிப்பு சம்பந்தமாக 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு நாளதுவரை யாதொரு அறிவிப்பும் வரவில்லை. மேலும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள்.

(iii) மனுதாரர்/வாதி தபசில் சொத்தை ஆதீனத்திடமிருந்து குத்தகைக்கு எடுத்ததை பொறுக்காத 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மனுதாரர்/வாதியை தபசில் சொத்தை அனுபவிக்க முடியாமல் பலவிதத்திலும் இடையூறு செய்து வந்ததால், காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, விசாரணையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எச்சரிக்கப்பட்டார். அதன்பின்னரும் கடந்த 20.10.2025 முதல் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியானவர் 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளின் வகையாட்களுடன் சேர்ந்து வாதிக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படுத்த முயற்சி செய்து வருவதால், மேலே கண்ட பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>**

1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இம்மனுவில் எதிருரையை தனியாகத் தாக்கல் செய்யவில்லை. மாறாக, 1ம் பிரதிவாதி அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையே இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொள்ளும்படி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதால், மேற்படி குறிப்பாணையானது அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையே இம்மனுவிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையாக பாவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/வாதியின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை. மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவில்

குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. உண்மையில், ஏகாம்பரபுரம் கிராமம், புல எண்.282/5ல் கண்ட சொத்து, 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, 1ம் பிரதிவாதியால் பயிர் செய்து அனுபவம் செய்து வரப்படுகிறது. மேற்படி சொத்திற்கு செல்வதற்கு வடக்கேயிருந்து தெற்கு நோக்கி வரும் பாதை வழியாக வந்து, பிராது தபசிலாக சொல்லப்பட்டுள்ள புல எண்.281ஐ தொட்டடுத்து தென்புறத்தில் அமைந்துள்ள கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1ல் கண்ட அரசுக்குப் பாத்தியப்பட்ட தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தின் வழியாக வந்துதான் 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அனுபவம் செய்து வருகிறார். இந்நிலையில், மனுதாரர்/வாதி, பிராது தபசில் சொத்தோடு சேர்த்து அதனை தொட்டடுத்து தென்புறமுள்ள கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1 சொத்தினையும் சேர்த்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வேலி அமைத்துக்கொண்டார். 1ம் பிரதிவாதி தனது சொத்திற்குள் செல்வதற்கு கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1–ஐ தவிர வேறு பாதை எதுவும் கிடையாது.

(iii) மனுதாரர்/வாதி, திருவாடுதுறை ஆதீனத்திடமிருந்து குத்தகைக்கு பெற்ற புல எண்.281 சொத்தினை அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் எந்த, வகையிலும் இடையூறு செய்யவில்லை. கோடாரங்குளம் கிராமம், புல எண்.281 சொத்தினை குத்தகைக்குப் பெற்றதாகக் கூறிக்கொண்டு, அரசுக்குப் பாத்தியப்பட்ட கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1 சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து 1ம் பிரதிவாதியை இடையூறு செய்வதைத்தான் 1ம் பிரதிவாதி சட்டவழிமுறைப்படி அரசு அதிகாரிகளிடம் முறையிட்டு வருகிறார். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>4. 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–</u>

2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் இம்மனுவில் எதிருரையை தனியாகத் தாக்கல் செய்யவில்லை. மாறாக, 2, 3 பிரதிவாதிகள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையே இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொள்ளும்படி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதால், மேற்படி

குறிப்பாணையானது அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையே இம்மனுவிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையாக பாவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/வாதியின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை. மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. பிராது தபசில் சொத்து திருவாடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதும், அதனை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதும் உண்மை. 1ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தை தொட்டடுத்து உள்ள வேறு சர்வே எண் சொத்தினை முன்பு அனுபவம் செய்து வந்தார். மேற்படி சொத்திற்கு செல்வதற்கு பிராது தபசில் சொத்து வழியாக டிராக்டர் போன்ற உழவாரப் பணிகளை செய்து வந்தார்.

(iii) பிராது தபசில் சொத்தினை வாதி திருவாடுதுறை ஆதீனத்திலிருந்து குத்தகைக்கு எடுத்து நெல்லி பயிர் செய்து வேலி அமைத்துள்ளதால், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வரும் பிராது தபசில் சொத்தை தொட்டடுத்து உள்ள சொத்திற்கு பிராது தபசில் சொத்தின் வழியாக செல்ல இயலாது. 1ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் இடையே உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக, 2, 3 பிரதிவாதிகளை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதாக வாதி கூறுவது ஏற்றுக்கொள்ளக்தக்கதல்ல. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2, 3 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் செயல்பட்டதில்லை. செயல்பட வேண்டிய அவசியமும் இல்லை. சட்ட திட்டத்திற்கு உட்பட்டே 2, 3 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். மேலும், பிராது தபசில் சொத்தினை வாதி அனுபவம் செய்வதை 2, 3 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் இடையூறு செய்யவில்லை. செய்யப்போவதுமில்லை. மேலும், பிராது தபசில் சொத்திற்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. எனவே, மனுதாரர்/வாதியின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதி கோரிய இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u> :-**

6. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாய்மொழிச் சாட்சியமும் முன்னிடப்படவில்லை, எவ்வித சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்/வாதி, திருவாவடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை மேற்படி ஆதீனத்திடம் கடந்த 29.01.2025 அன்று டிரிப்ளிகேட்டில் அடையோலை மூலம் குத்தகைக்கு பெற்று, குத்தகை தொகை செலுத்தி தபசில் சொத்தை சுற்றிலும் முள் வேலி அமைத்து நெல்லி கன்றுகள் வைத்து விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார் என்றும், தபசில் சொத்திற்கு தெற்கே ஓடை மற்றும் பாறை புறம்போக்கு உள்ளது என்றும், தபசில் சொத்திற்கு தென்புறம் யாதொரு வழிப் பாதையும் கிடையாது என்றும், இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு தென்புறம் பாதை இருப்பதாகவும், அதை வாதி ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும் கூறி 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியிடத்தில் மனு கொடுத்தார் என்றும், மேற்படி மனுவிற்கு வாதியால் தகுந்த ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியானவர் மனுதாரர்/வாதி தபசில் சொத்தை அமைதியாக அனுபவம் செய்ய விடாமல் பல்வேறு வகையில் இடையூறு செய்து வருகிறார் என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், இந்த இடைக்கால மனு அனுமதிக்கப்படாவிட்டால், மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

**8.** 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், ஏகாம்பரபுரம் கிராமம், புல எண்.282/5ல் கண்ட சொத்து, 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், பிராது தபசிலாக சொல்லப்பட்டுள்ள புல எண்.281ஐ தொட்டடுத்து தென்புறத்தில் அமைந்துள்ள கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1ல் கண்ட அரசுக்குப் பாத்தியப்பட்ட தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தின் வழியாக வந்துதான் 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்நிலையில், மனுதாரர்/வாதி, பிராது தபசில் சொத்தோடு அதனை தொட்டடுத்து தென்புறமுள்ள கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1 சொத்தினையும் சேர்த்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வேலி அமைத்துக்கொண்டார் என்றும், 1ம் பிரதிவாதி தனது சொத்திற்குள் செல்வதற்கு கோடாரங்குளம் கிராமம், புல எண்.147/1–ஐ தவிர வேறு பாதை எதுவும் கிடையாது என்றும், மனுதாரர்/வாதி, திருவாடுதுறை ஆதீனத்திடமிருந்து குத்தகைக்கு பெற்ற புல எண்.281 சொத்தினை அனுபவம் செய்து வருவதை 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் எந்த, வகையிலும் இடையூறு செய்யவில்லை என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

**9.** 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், பிராது தபசில் சொத்து திருவாடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதும், அதனை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதும் உண்மை என்றும், 1ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தை தொட்டடுத்து உள்ள வேறு சர்வே எண் சொத்தினை முன்பு அனுபவம் செய்து வந்தார் என்றும், மேலும், 1ம் பிரதிவாதி மேற்படி சொத்திற்கு செல்வதற்கு பிராது தபசில் சொத்து வழியாக டிராக்டர் போன்ற உழவாரப் பணிகளை செய்து வந்தார் என்றும், இந்நிலையில், பிராது தபசில் சொத்தினை வாதி திருவாடுதுறை ஆதீனத்திலிருந்து குத்தகைக்கு எடுத்து நெல்லி பயிர் செய்து வேலி அமைத்துள்ளதால், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வரும் பிராது தபசில் சொத்தை தொட்டடுத்து உள்ள சொத்திற்கு பிராது தபசில் சொத்தின் வழியாக செல்ல இயலாது நிலை ஏற்பட்டதால், 1ம் பிரதிவாதிக்கும், வாதிக்கும் இடையே உள்ள தனிப்பட்ட விரோதம் ஏற்பட்டுள்ளது என்றும், இவ்வாறான நிலையில், 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக

2, 3 பிரதிவாதிகள் செயல்பட்டு வருவதாக வாதி கூறுவது ஏற்புடையதல்ல என்றும், மேலும், பிராது தபசில் சொத்தினை வாதி அனுபவம் செய்வதை 2, 3 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் இடையூறு செய்யவில்லை என்றும், பிராது தபசில் சொத்திற்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே, இந்த இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதம் செய்தார்.

**10.** வழக்கு ஆவணங்களைப் பார்வையிட்டபோது, அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தை வாதி அமைதியாக அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது வேலையாட்களோ யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில், மனுதாரர்/வாதி, பிராது தபசில் சொத்தை திருவாவடுதுறை ஆதினத்திடமிருந்து குத்தகைக்கு பெற்று, விவசாயம் செய்து அனுபவித்து வருவதாகவும், தபசில் சொத்திற்கு தெற்கே ஓடை மற்றும் பாறை புறம்போக்கு உள்ளது என்றும், தபசில் சொத்திற்கு தென்புறம் யாதொரு வழிப் பாதையும் இல்லாத நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தபசில் சொத்திற்கு தென்புறம் பாதை இருப்பதாகவும், அதை வாதி ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும் கூறி 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியிடத்தில் மனு கொடுத்து 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியானவர் மனுதாரர்/வாதி தபசில் சொத்தை அமைதியாக அனுபவம் செய்ய விடாமல் பல்வேறு வகையில் இடையூறு செய்து வருவதால், வழக்கு முடியும் வரை தபசில் சொத்தைப் பொறுத்து இடைக்கால தடை உத்தரவு வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் என்ன மாதிரியான இடையூறுகளை செய்தார்கள், எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடத்தில் இடையூறு செய்தார்கள் என்பது குறித்து இம்மனுவில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பிலும் வாதி திருவாவடுதுறை ஆதீனத்திடமிருந்து குத்தகைக்கு பெற்று புல எண்.281 சொத்தினை அனுபவம் செய்து வருவதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதேபோல், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பிலும் தாவா சொத்து திருவாவடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்டது

என்பது குறித்தும், அதனை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பது குறித்தும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் ஆதரவாக செயல்பட்டதில்லை என்றும், வாதிக்கு எதிராக எந்த காலத்திலும் இடையூறு செய்ததில்லை என்றும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்நிலையில், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் எந்த வகையில் இடையூறு செய்தார்கள் என்பதனை வாதி தரப்பில் நிரூபிக்கும் வகையில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**11**. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம், கீழமை நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கும்போது என்னென்ன சங்கதிகளை கருத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று **“Seema Arshad Zaheer Vs. Municipal Corporation of creater Mumbai 2006 (5) SCC 282”** என்ற முன்தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

> The Discretion of the court is exercised to grand a temporary injunction only when the following requirements are made out by the plaintiff :
>
> (i) Existence of a prima facie case as pleaded, necessitating protection of the plaintiffs rights by issue of a temporary injunction:
>
> (ii) When the need for protection of the plaintiffs rights is compared with or weight against the need for protection of the defendants rights or likely infringement of the defendants rights, the balance of convenience tilting in favour of the plaintiff: and
>
> (iii) Clear possibility of irreparable injury being caused to the plaintiff if the temporary injunction is not granted. In addition, temporary injunction being an equitable relief, the discretion to grant such relief will be exercised only when the plaintiffs conduct is free from blame and he approaches the court with clean hands.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**12.** இந்த வழக்கில் மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாமல்போனால் மனுதாரர்/வாதிக்கு எந்தவொரு கடுமையான

இழப்பும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில், மனுதாரர்/வாதி தபசில் சொத்தினை அனுபவம் செய்து வருவதை எவ்விதத்திலும் இடையூறும் செய்யவில்லை என எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். அதனை அனுசரித்து வாதமும் செய்யப்பட்டுள்ளது. மனு சங்கதிகளிலிருந்து தபசில் சொத்தானது மனுதாரர்/வாதிக்கு அனுபவத்தில் இருப்பதாகவே தெரியவருகிறது. எனவே, மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக முதன்மை நோக்கு வழக்கும், சமநிலைநோக்கு வாய்ப்பும், ஈடு செய்ய இயலாத இழப்பும் இல்லாததால் மனுதாரர்/வாதி கோரியுள்ளபடி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டிய அவசியம் இந்த மனுவில் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.

**13.** மேலும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பரிகாரத்தைப் பார்வையிட்டபோது, மனுதாரர்/வாதி தபசில் சொத்தை அமைதியாக அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ அல்லது வேலையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என வழக்கு முடியும் வரை இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதேபோல், மேற்கண்ட பரிகாரம் தான் அசல் வழக்கிலும் வாதியால் கோரப்பட்டுள்ளது.

**14.** இந்நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **"S.Venkatesh Vs. P.Poongodi" (C.R.P.P.D. No.3570/2008 and MP No.1/2008, Dated 03.11.2008)** என்ற முன்தீர்ப்பில் பாரா 8, 9 ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

> **8. As far as the present case is concerned, this Court is of the considered view that the relief of permanent injunction prayed for in the suit and the relief of interim injunction prayed for in the application in I.A. No.121 of 2008 in O.S. No.88 of 2008 is of same nature. Admittedly, the respondent/plaintiff is not residing in the suit property.**
>
> **9. Without going into the merits of the case and leaving open the issues/disputes in the suit, and taking note of the fact that the relief prayed for in the main suit viz., permanent injunction and the interim injunction**

> **prayed for in the application is one in nature and in view of the facts of the case, this Court opines that the controversies involved in the suit can be decided in the main suit itself and therefore this Court directs the parties to get ready with the conduct of the trial of the main suit and in that view of the matter, this Court disposes the civil revision petition.**

**15.** மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் அளித்த முன்தீர்ப்பின்படி அசல் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரமும், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், கட்டளை 39, விதி 1, 2ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு கோரப்பட்டுள்ள பரிகாரமும் ஒன்றாக இருந்தால் மனுதாரர்களால் கோரப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது என்று தெளிவாக எடுத்துரைத்துள்ளது. மேற்படி முன்தீர்ப்பானது இந்த வழக்கிற்கு முற்றிலும் பொருந்துவதாக அமைந்துள்ளது.

**16.** மேற்கண்ட சங்கதிகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்/வாதியால் கோரப்பட்ட பரிகாரம் வழங்கப்பட்டால் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி கோரிய பரிகாரத்தை வழங்குவது போல் இருப்பதால் அசல் வழக்கில் உபயதரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை முழுமையாக தீர்மானிக்கக்கூடியதாக உள்ளது என்பதாலும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள விபரங்களை அசல் வழக்கில்தான் தீர்மானிக்க முடியும் என்பதாலும், இந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும், மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையிலும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவினை தள்ளுபடி செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17.** இம்மனுவின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது செலவுத்தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்./– ப.பிரவீன் ஜீவா,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.

**மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :–**

இல்லை

**மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

இல்லை

**ஒம்./– ப.பிரவீன் ஜீவா,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.